**S.C. No.323/2017**
**P.W.19 திரு.மணிகண்டன், காவல் ஆய்வாளர்**
**நாள் – 05.08.2025**
( எதிரிகள் ஆஜர். )

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–</u>**

வீடியோ பதிவுகளை எவ்வாறு பதிவிறக்கம் செய்ய வேண்டும், எவ்வாறு ஒப்பீடு செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். சிசிடிவி பதிவுகள் அனைத்தும் DVR ல் சேமித்து வைக்கப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கில் DVR கைப்பற்றவில்லை என்றால் சரிதான். வீடியோ பதிவுகளை ஒப்பீடு செய்வதற்கு Anthropology என்று ஒரு துறை உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக கைப்பற்றப்பட்ட வீடியோ பதிவுகளை Anthropology துறைக்கு அனுப்பி ஒப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் வீடியோ பதிவுகள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும், சிடியில் நான் கைப்பற்றியதாக சொல்லப்படும் வீடியோ பதிவுகள் வழக்கிற்காக பின்னிட்டு உருவாக்கப்பட்டது என்றும், சட்டப்படியாக செல்லத்தக்கக்கூடிய ஆவணங்களையும் இணைத்து தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுடைய செல்போனுடைய உள் வெளி அழைப்புகள் மற்றும் Location அடங்கிய CDR கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். அது போல் இறந்து போன மணியின் செல்போன் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான் மற்றும் அவருடைய செல்போனின் உள் வெளி அழைப்புகள் மற்றும் Location அடங்கிய CDR கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையில் எதிரிகளுடைய செல்போன் Location உள் வெளி அழைப்புகளும் இறந்தவரின் செல்போன் செல்போன் Location உள் வெளி அழைப்புகளும் இந்த வழக்கிற்கு விரோதமாக இருந்ததால் மறைக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து கைரேகை எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இரண்டு டொரினோ பாட்டில்களில் இருந்த கைரேகை பதிவுகள் சம்பந்தமாக நிபுணருக்கு அனுப்பவில்லை என்றால்

சரிதான். அது போல் சம்பவயிடத்திலிருந்து டொரினோ பாட்டில்களின் மூடியோ மற்றும் opener கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், வழக்கில் உண்மையான எதிரிகள் மற்றும் சம்பவத்தை மறைத்து நிர்பந்தத்தின் பேரில் எதிரிகளுக்கு எதிராக சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற பத்திரிகை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.